செய்தி வெளியீடு எண்:426 நாள் : 12.08.2014

## ஓய்வூதியர் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – 2014

## ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் கவனத்திற்கு

தமிழ் நாடு அரசு 2014 ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல் ஓய்வூதியர்களுக்கான / குடும்ப ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014 ஐ நடைமுறைபடுத்தியுள்ளது. இதற்காக அனைத்து ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் / மாவட்ட கருவூலம் / சார் கருவூலம் / பொதுத்துறை வங்கிகளில் 31–07–2014க்குள் சமர்ப்பிக்க ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். இருப்பினும் இன்னும் பல ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் குறிப்பிட்ட படிவத்தில் விவரங்களை பூர்த்தி செய்து ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் / மாவட்டக் கருவூலம் / சார் கருவூலம் / பொதுத்துறை வங்கிகளில் 31–07–2014க்குள் சமர்ப்பிக்கவில்லை என தெரியவருகிறது.

ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் அனைவருக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் அனைத்து ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014 க்கான படிவங்களை பூர்த்தி செய்து ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் / மாவட்டக் கருவூலம் / சார் கருவூலம் / பொதுத்துறை வங்கிகளில் 20–08–2014க்குள் சமர்ப்பிக்குமாறு இதன்மூலம் அனைத்து ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களும் மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் அவர்கள் இரண்டு படிவங்களில் பூர்த்தி செய்து ஒரு படிவத்தில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் / மாவட்டக் கருவூல அலுவலர் / சார் கருவூல அலுவலர் / பொதுத்துறை வங்கி மேலாளரிடமிருந்து ஒப்புகை பெற்று அதனையே மருத்துவ சிகிச்சை பெற பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ச.முனியநாதன்
கருவூலக் கணக்கு இயக்குநர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9